# IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI

MCOP.No.40/2018 Date: 14.03.2025.

PW1- செல்வி

சாட்சி மீண்டும் முன்னிலையானதின் பேரில் 2 ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:

விபத்தில் இறந்த என் மகனுடைய வயது விபத்து சமயத்தில் 18 என்றால் சரிதான். விபத்தில் கோபிக்கு தலைக்காயம் ஏற்பட்டு இறந்தார் என்றால் சரிதான். தலைக்கவசம் அணியவில்லை என்பதால் தான் தலையில் காயமானது என்றால் சரியல்ல. கோபிக்கு ஓட்டுநர் உரிமம் வழங்கப்படவில்லை என்றால் சரிதான். ஓட்டுநர் உரிமம் இல்லாமல் வாகனத்தை ஓட்ட தெரியாமல் ஓட்டி சென்று விபத்தை ஏற்படுத்தி கொண்டார் என்றால் சரியல்ல. அதேபோல் 1 ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் ஓட்டுநருக்கும் செல்லுபடியாகத்தக்க ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரிதான். கோபிக்கு நான் மட்டும் தான் சட்டப்படியான வாரிசு என்றால் சரிதான். மணிகண்டன் கூலி வேலை செய்கிறார். தேவா கல்லூரியில் படிக்கிறார். கோபி இறக்கும் வரை என் கணவர் கூலி வேலை செய்து குடும்பத்தை பராமரித்து வந்தார் என்றால் சரியல்ல. என் மகன் தான் பராமரித்தார். 2 முதல் 4 மனுதாரர்கள் கோபியை சார்ந்து வாழவில்லை என்பதால் அவர்களுக்கு இழப்பீடு கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. கோபி எங்கு யாரிடம் வேலை செய்தார் என்று மனு தாக்கல் செய்யும் போது எனக்கு தெரியும். ஆனால் அதில் மனுவில் சொல்லவில்லை என்றால் சரிதான். கோபி இறக்கும் போது ரிக் வண்டியில் டிரில்லராக வேலை செய்தார். வேலு என்பவர் என் கணவரின் சகோதரர். அவரும் ரிக் வண்டியில் வேலை செய்தார். அவருடன் என் மகன் வேலை பழகுவதற்காக தான் சென்றார் என்றால் என் மகன் வேலை கற்று கொண்டுவிட்டார். என் மகன் டிரில்லர் வேலை செய்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான் கேட்டுள்ள இழப்பீடு அதிகம் என்றால் சரியல்ல. அவர் மாதம் ரூ.20,000/-ம் சம்பளமும் தினசரி பேட்டா ரூ.200/-ம் சம்பாதித்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல.

Sd/-செல்வி

Sd/-திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி.